S. M. Fernando
(Opticians)
எமது ஸ்தாபனம் மீண்டும்
பழைய இடத்திலேயே
இயங்கி வருகிறது
என்பதை
வாடிக்கையாளர்களுக்கு
மிக்க மகிழ்ச்சியுடன்
அறியத்தருகிறோம்
காலை 9.30 மணிமுதல்
பிற்பகல் 12.30 வரை
இயங்குகிறது.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

எஸ். எம்.
பெர்னாண்டோ
எமது கிளை ஸ்தாபனம்
எதுவும் வேறு எந்த
இடத்திலும்
இயங்கவில்லை என்பதை
வாடிக்கையாளர்களுக்கு
அறியத் தருகிறோம்
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி
அருகாமை)
யாழ்ப்பாணம்

சுடர்: 5 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 30 உ செவ்வாய்க்கிழமை (16-10-1990) ஹிஜ்ரி 1410 ற அவ்வல் 26 UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 223

## திருகோணமலை மாவட்டத்தில் கண்ணியில் சிக்கி 7 சிப்பாய்கள் பலி!

### ஆயுதங்களும் புலிகளால் மீட்பு

யாழ்ப்பாணம், அக். 16

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதல் ஒன்றில் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்கள் ஏழுபேர் கொல்லப்பட்டனர்.

அவர்களிடமிருந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன.

சூரன்கல் இராணுவ முகாமிலிருந்து கற்குழி இராணுவ முகாமுக்கு உழவு இயந்திரத்தில் சென்ற இராணுவத்தினர் மீதே விடுதலைப்புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டன.

இந்தத்தாக்குதலை அடுத்து பின்வரும் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன.

★ எவ் என் ஸி ரக துப்பாக்கி - 1
★ ரி 81 ரக துப்பாக்கி - 1
★ ரவைகள் - 300
★ எஸ் எம் ஜி. ரவைக் கூடு - 300
★ ஜே.ஆர். ரக கைக்குண்டுகள் - 3
★ தலைக்கவசம் - 1

(உ)

### பலாலி, காங்கேசன் சுற்றாடலில் தாக்குதல்கள்

காங்கேசன்துறை, அக். 16

பலாலி, காங்கேசன்துறை இராணுவ முகாம் சுற்றாடலில் நேற்று தொடர்ச்சியான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

காலை 9 மணிக்கும், 11 மணிக்கும் ஹெலிக்கொப்டர் மயிலிட்டி, கட்டுவன், தெல்லிப்பழை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை பகுதிகளில் சடுமையான சுவிபர் தாக்குதலை மேற்கொண்டது.

நண்பகல் ஒரு மணியளவில் இரு பொம்மர்கள் பலாலி முகாம் சுற்றாடலில் தாழப் பறந்து நோட்டம் விட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் பாடசாலைகள் நேற்று ஆரம்பமாகின

#### 5 சதவீத மாணவர்களே வரவு

கடந்த நான்குமாதங்களின் பின்னர் குடாநாட்டில் உள்ள பாடசாலைகள் நேற்று ஆரம்பமாகின யாழ் நகரப் பாடசாலைகளில் அனேகமானவை நேற்றுத் திறக்கப்பட்டன.

நகரப்புறபாடசாலைகளில் 5 சதவீத மாணவர்கள் மட்டுமே வருகை தந்திருந்தனர். பெரும்பான்மையான ஆசிரியர்கள் சமூகமளித்திருந்தனர்.

குடாநாட்டில் கிராமப்புற பாடசாலைகளில் மாணவர்களின் வரவு சுமாராக இருந்ததாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

குருநகர்ப் பகுதியில் சில பாடசாலைகளில் மிகமிக குறைந்தளவு மாணவர்கள் வந்திருந்தனர். இன்னும் சில பாடசாலைகளில் மாணவர் வரவு முற்றாக இல்லாதிருந்தது. (ஒ-5-51)

### பூநகரியில் வள்ளம் மீது சூடு! ஒருவர் பலி; மற்றவர் காயம்

குருநகர், அக். 16

பூநகரி, கிரிக்குடா கடல் பகுதியில் இயந்திர வள்ளத்தில் சென்றுகொண்டிருந்த நான்குபேர் மீது ஹெலிக்கொப்டர் ஒன்று சுவிபர் தாக்குதல் நடத்தியது.

இதனால் படகின் சென்றவர்களில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமுற்றார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றது.

குருநகர் இரண்டாம்குறுக்கு வீதியைச் சேர்ந்த எஸ் குமார் (வயது 30) என்பவரே உயிரிழந்தவராவார்.

படுகாயமுற்ற குருநகர் தொடர்மாடியைச் சேர்ந்த அருளப்பு எட்மன் ஜேசுதாசன் (வயது 24) என்பவர் மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ-51-15)

### சமாதான நோபல் பரிசு அதிபர் கோர்ப்பச்சேவுக்கு!

ஒஸ்லோ, அக். 16

1990 ஆம் ஆண்டுக்கான நோபல் சமாதானப் பரிசு சோவியத்யூனியன் ஜனாதிபதி மிக்செய்ல் கோர்ப்பச்சேவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நோபல் கமிட்டி இப் பரிசுக்கு சிபார்சு செய்யப்பட்ட பலபேர்களில் இருந்து திரு கோர்ப்பச்சேவை தெரிவு செய்தது.

கிழக்கு ஐரோப்பிய அரசியலில் பெரிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்தியதற்காகவும், சோவியத்யூனியனில் அரசியல் சீர்திருத்தத்தை ஏற்படுத்தியதற்காகவும் சமாதானப் பரிசு திரு கோர்ப்பச்சேவுக்கு வழங்கப்படுவதாக ஒஸ்லோவில் அறிவிக்கப்பட்டது.

### உன்னிச்சையில் சிப்பாய்கள் கால் இழந்தனர்

யாழ்ப்பாணம், அக். 16

மட்டக்களப்பு மாவட்டம் உன்னிச்சையில் நேற்று விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கி இரு இராணுவத்தினர் தமது கால்களை இழந்தனர்.

—விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ)

### பரந்தனில் பெண் காலை இழந்தார்!

பரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் (ஞாயிறு) மிதிவெடியில் சிக்கிய பெண் ஒருவர் வலது காலை இழந்தார்.

மேரி ரீட்டா கந்தசாமி (வயது 21) என்ற அந்தப் பெண் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னரே பரந்தனில் மீளக் குடியேறிய போதும், வீட்டின் படலைக்குள் மறைந்திருந்த மிதிவெடி ஞாயிறன்றே வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

### திருநெல்வேலி உயிரிழப்பு 4ஆக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், அக்.16

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் [ஞாயிறு] இடம்பெற்ற பொம்மர் தாக்குதலின்போது படுகாயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் கு. நாகரத்தினம் (வயது 55)என்பவர் அன்றிரவு மரணமானார்.

இச்சம்பவத்தில் இறந்தோரின் எண்ணிக்கை இத்துடன் நான்காக அதிகரித்தது (ஒ-15)

### ஷெல் வீச்சில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், அக் 16

பலாலியிலிருந்து நேற்றுக் காலை ஏவப்பட்ட ஷெல் சண்டிலிப்பாயில் விழுந்து வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். செல்வராசா (வயது 20) என்பவரே காயமடைந்தார். (ஒ-15)

### ஊர்காவலர் பலி

அனுராதபுரம் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு ஊர்காவல் படையினர் உயிரிழந்தனர். [உ-எ]

## வேலணையிலும் விமானத் தாக்கு!

### உதவி அரசஅதிபர் பணிமனை சேதம்

வேலணை, அக். 16

வேலணையிலும் நேற்று பிற்பகல் 2.55 மணியளவில் இரு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. அதனால் உதவி அரசாங்க அதிபர் பணிமனை பெரும் சேதமுற்றது.

வேலணை வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ள வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் மீது ஒரு குண்டு விழுந்தது. இதனால் உதவி அரசாங்க அதிபர் பணிமனை முற்றாகச் சேதமடைந்தது.

பணிமனையின் மீது குண்டு விழுந்த சமயம் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு நா. தனபாலசிங்கமும், கிராமசேவை அலுவலர்களும், உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஊழியர்களும் அருகாமையில் உள்ள கோட்டக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் சிலரும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இருந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

### மந்திகைப் பகுதியில் குண்டு வீச்சு! பாடசாலை, ஆஸ்பத்திரி சேதமாகின

புலோலி, அக். 16

மந்திகையில் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைப் பகுதியில் நேற்றுக் காலை 10. 30 மணியளவில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இப்பகுதியில் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. பாடசாலை சேதமடைந்தது. அருகிலுள்ள சில வீடுகளும் சேதமாகின.

பாடசாலைக்கு மிகக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களும், 27 ஆசிரியர்களும் வந்திருந்தனர். அவர்கள் தெய்வாதீனமாகத் தப்பிவிட்டனர். ஏகாம்பரநாதன் விவேகானந்தன் (10 வயது) என்பவர் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலின்போது பாடசாலைக்கு சமீபமாகவுள்ள மந்திகை வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவும் பாதிப்படைந்தது.

நோயாளர்கள் பெரும் பதற்றமுற்று அவதியுற்றனர்.

ஞாயிறு அதிகாலை 2 மணியளவில் இப்பகுதியில் சீப்பிளேன் வட்டமிட்டு நோட்டமிட்டுச் சென்றிருந்தது. (ஒ-94)

### இன்று முதல் மின்சாரம்; ஒரு சில பகுதிகளுக்கே!

யாழ்ப்பாணம், அக். 16

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் சில பகுதிகளுக்கு ஆறு மணி நேரம் மின்சாரம் கிடைக்கும்.

குடாநாட்டின் பதினைந்து சதவீதமான பகுதிகளுக்கே இந்த மின் விநியோகம் வழங்கப்படும் என மின்சாரசபையின் யாழ். பிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் திரு. எஸ். கந்தசாமி தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் 50 பரல் 'டிரான்ஸ்போமர் ஒயில்'' வந்து சேரும் பட்சத்தில்—

ஆறுமணிநேர மின்சார விநியோகத்தை மொத்தம் (குடாநாட்டின்) 25 சதவீதமான பகுதிகளுக்கு வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பல இடங்களில் மின்விநியோகம் செய்வதற்குத்தேவையான விதத்தில் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-15)

### பாடசாலைகள் இயங்குவதற்கு புலிகள் முழு ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம், அக். 16

தமிழீழத்தில் இயங்கக்கூடிய பாடசாலைகள் அனைத்தும் செயற்படுவதற்கு நாம் ஒத்துழைப்போம்

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப் பட்டிருக்கிறது

அந்த அறிக்கையில் —

7ஆம், 8ஆம் வகுப்பிற்கு மேல் பாடசாலையில் வகுப்புகள் நடைபெறுவதை நாம் தடை செய்துள்ளோம் என சிலர் செய்து வரும் விஷமப் பிரசாரத்தில் எந்தவித உண்மையுமில்லை

பாடசாலைகளில் அகதிகளாக இருக்கும் மக்களுக்கு மாற்று இருப்பிட வசதிகளை செய்த பின்பு அந்தப் பாடசாலைகளை இயங்கச் செய்யலாம் என மட்டும் நாம் கருத்துக் கூறியிருந்தோம்.

— என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

### படகு மீது புலிகள் தாக்கு; கடற்படைச் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், அக். 16

தலைமன்னாரில் நேற்று முன்தினம் இரவு 10. 30மணியளவில் கடற்படையின் சிறு படகு ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

பொதுமக்களின் மீன்பிடிப் படகு ஒன்றைப் பிடிப்பதற்காக அதனைத் துரத்திச் சென்ற கடற்படைப் படகு மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலின்போது கடற்படை படகு சேதமுற்றது என்றும் —

அதிலிருந்து ஜே. ஆர் ரக கைக்குண்டுகள் - இரண்டு. ஏ கே. மகஸின் (ரவைக்கூடு)கள் - இரண்டு, எல். எம். ஜி (லிங்க்) - நூறு ஆகியவை மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

### உங்கள் வாகன "என்ஜின்" செயலிழக்கலாம்! கவனம்!!

யாழ்ப்பாணம், அக்டோபர் 16

வாகன உரிமையாளர்களே எச்சரிக்கையாக இருங்கள்! இல்லையேல் உங்கள் வாகனங்களின் 'என்ஜின்' கள் செயலிழந்து போகும் அபாயம் ஏற்படும்!!

இதென்ன இப்படி ஓர் எச்சரிக்கை என்று மூக்கில் விரல் வைக்காதீர்கள்.

யாழ்ப்பாணத்தில் ''டிரான்ஸ் போமர் ஒயில்'' கலக்கப்பட்ட டீசல் பெருமளவில் விற்பனையானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலப்பட டீசலைப் பயன்படுத்தும் வாகனங்களின் என்ஜின்கள் சில நாட்களில் திருத்த முடியாதபடி செயலிழந்து போவதும் கண்டறியப் பட்டுள்ளது.

குடாநாட்டிற்கான மின் விநியோகம் தடைப்பட்ட

[4 ஆம் பக்கம் பார்க்க]

### வங்கிகள் நேற்று இயங்கின; ஆனால் பணப்புழக்கம் இல்லை!

யாழ்ப்பாணம், அக் 16

யாழ். நகரத்தில் உள்ள சகல வங்கிக் கிளைகளும் நேற்று முதல் இயங்கத் தொடங்கிய போதும், பணப் புழக்கம் வழமைக்குத் திரும்பவில்லை என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளை நேற்று வழமைபோல் இயங்கியது சர்வதேசப் பிரிவில் நேற்று முதல். குவைத் நாட்டைத் தவிர்ந்த மற்றைய நாட்டுக் காசோலைகளை வைப்பிலிட வசதி செய்யப்பட்டிருந்தது

ஏராளமானோர் வெளிநாட்டுக் காசோலைகளை வைப்பிட வங்கிக்கு வந்திருந்தனர்

இந்தக் காசோலைகளை கொழும்பில் உள்ள அந்தந்த வெளிநாட்டு வங்கிக் கிளைகளுக்கு அனுப்பி, பணமாற்றீடு பெற்ற பின்னரே அவற்றை வைப்பிட்டவரின் கணக்கில் அத்தொகை வரவு வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளையில் ஆகஸ்ட் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### நோயாளர்கள் கப்பலில் கொழும்பு செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக். 16

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று, கொழும்பில் விசேட சிகிச்சை தேவை எனக் கருதப்படும் அவசர நோயாளர் அங்கு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இம்மாதம் 28 ஆம் திகதி கப்பல்மூலம் செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் செல்வி புஷ்பம் சண்முகம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கப்பலில் செல்ல விரும்பும் அவசர நோயாளர்கள் எதிர் வரும் 19, 20, 21 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு தமது விண்ணப்பங்களை நேரிலோ அல்லது நெருங்கிய உறவினர் மூலமாகவோ வைத்தியசாலையில் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் டாக்டர்களால் சிபார்சு செய்யப்பட்ட அவசர நோயாளர்களே கப்பலில் கொழும்பு செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ-15)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### விற்பனைக்கு

பனை 'ரம், திராந்தி சீற், கதவு, யன்னல், கிறில் [ஸ்ரீல்] விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும்; கைலாசபிள்ளையார் கோவில் பின்வீதி, நல்லூர். [14444]

### ரதி வோச் வேக்ஸ்

(Rathy Watch Works)

எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைக்காக தந்த மணிக்கூடு வகைகளை இல. 12. பொன்னைய வேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் பெற்றுக் கொள்ளவும். திருத்துதல் வேலைகளும் நடைபெறுகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம் (யாழ் நகரிலா மணிக்கூடுகள் திருத்துவதில் பிரசித்தி பெற்றவர்கள்) (14101)

### றோனியோ

மீண்டும் றோனியோ தமிழ் ஆங்கில தட்டச்சு சகல விதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள்: தயா அச்சகம் இல. 138 நாவலர் றோட், யாழ்ப்பாணம். நேரம்: காலை 9 00 - 12.00 மணி வரை (14372)

### பரிஸ் ரெக்ஸ்

105. அரசடி வீதி தட்டாதெரு, பிரவுண் வீதி, சந்திக்கு அருகாமையில் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்கட்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (14446)

### ''இராவணன்கோட்டை''

சிறுவர்களுக்கான கதை மாயாஜால மந்திர தந்திர வீரதீரச் செயல்கள் நிறைந்தது 20/- ரூபா துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம். சிவம் திருக்கணிதம் புத்தகசாலைகள் சாவகச்சேரி, லக்கி புத்தகசாலை. பண்டத்தரிப்பு, ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். (14388)

### திருமணம்

எம்மிடம் எல்லாச்சாதி சமயத்திலும், கோவைகளிலும் மணமக்கள் இருக்கின்றார்கள். பிராமணா, விஸ்வகுலத்தாரும் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (14467)

### TOEFL

கலாநிதி போட்டரினால் நடாத்தப்படும் வார இறுதிப் பயிற்சி வகுப்புக்கள் 20 - 10 - 90 அன்று ஆரம்பமாகும். சில வெற்றிடங்களே உண்டு தொடர்பு: இவ்லின் இரத்தினம் நிறுவனம், டயஸ் வீதி, (பல்கலைக்கழக ஒழுங்கை) திருநெல்வேலி. (14466)

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva Studio அருகாமையில் (சி-5219)

## மரம் நாட்டுத் திட்டம்

### கலந்துரையாடல்

இடம். கைலாசபதி அரங்கு - யாழ். பல்கலைக்கழகம்.

காலம். 16 10-90 காலை 10.00 மணி

அழைக்கப்படுவோர்: ஆணையாளர் மாநகரசபை, நகரசபைச் செயலாளர்கள், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களும், பொறுப்பதிகாரிகளும், பிரதேச சபைகள், சனசமூகநிலையங்களின் சமாஜங்களினதும், சம்மேளனத்தினதும், அங்கத்தவர்கள், சகல சனசமூகநிலையங்களின், தலைவர்கள், செயலாளர்கள், உதவி விவசாயப்பணிப்பாளர், வன இலாகா அதிகாரி - மற்றும் இதில் ஆவல் கொண்டோர்.

அன்புடன் அழைக்கின்றோம்.

சு. டிவகலாலா,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ். மாவட்டம்

சி 5312

## ★ கோழித்தீன் ★

PRIMA கோழித்தீன்

வழமைபோல் விற்பனைக்குண்டு.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச் சந்தி, நல்லூர்.

[14469]

## குருநகர் மக்களுக்கு குடிசைகள்

யாழ்ப்பாணம். அக் 16

குருநகர், பாஷையூர் பகுதிகளில் வீடுகள் முற்றாகச் சேதமடைந்தவர்களுக்குக் குடிசைகளை அமைத்துக் கொடுக்க மனித முன்னேற்ற நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது

வீடுகள் முற்றாகச் சேதமடைந்த விவரங்களைச் சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்ட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ - 3]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சரஸ்வதி கந்தையா

தோற்றம்:- 09 - 05 - 1918  மறைவு: 16 - 09 - 1990

அன்பின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எமக்கு ஒளிவீசிவிட்டு அணைந்துவிட்ட அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சிரமங்களின் மத்தியிலும் இவரது ஈமைக்கிரியையில் கலந்து சகல விதத்திலும் ஒத்தாசைபுரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்

பலாலி வீதி,
உரும்பராய.

(14464)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்லையா சின்னத்துரை

(இளைப்பாறிய அரச அலுவலர், கல்வி இலாகா)

தோற்றம்: 1924 - 11 - 30

மறைவு: 1987 - 10 - 20



### பிறேமா சின்னத்துரை

(வேம்படி மகளிர் கல்லூரி, மாணவி)

தோற்றம்: 1969 - 06 - 30

மறைவு - 1987 - 10 - 20

திதி: 1990. 10. 16

அமைதி காக்க வந்தவர்
பொழிந்த வேட்டு மழையில்
ஆவி பிரிந்து ஆண்டுகள் மூன்று
ஆனது ஆயினும் எமது
நினைவில் நித்தமும் நிலைக்கிறீர்
பாசமிகும் தந்தையாய்
நேசமிகும் சோதரியாய்
எங்களுடன் நீங்கள்
வாழ்ந்திருந்த நாட்கள்
பசுமை நினைவுகளாய்
நெஞ்சினில் இனிக்கும்
இழப்பின் சோகம்
வாட்டிடும் போதிலும்
ஆத்ம சாந்திக்காய்
அர்ச்சிக்கின்றோம்

தங்கள் பிரிவால் துயருறும்:
திருமதி சி, பராசக்தி, உதயகுமார், வரதன், விபுலன், அல்லி, பாமா, பத்மா, உறவினர், நண்பர்கள்.

உரும்பராய் தெற்கு.
உரும்பராய்

(சி-5311)

## மூன்றாண்டு நினைவஞ்சலி



### இராசதுரை பிரபாகர்

பிறப்பு: 25 — 12 — 1972

அழிப்பு 20 — 10 — 1987

திதி: 16 - 10 - 1990

பிரபா!

மூன்றாண்டு சென்றாலும் உன் நினைவு என்றும் எங்களை விட்டு அகலாது. உனது ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அன்பு அம்மா,
அக்கா.

ஞானவயிரவர்
கோவிலடி,
உரும்பராய் தெற்கு.
உரும்பராய்.

[14462

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி சியாமளா புஸ்பராசா

(விஞ்ஞான ஆசிரியை, விக்கினேஸ்வரா வித்தியாலயம் கைதடி)

சனனம்: 09. 04. 1951  மரணம்: 01. 10. 1986

திதி: 16. 10. 1990

ஆருயிர் துணைவி, அம்மா பெரியமகளே அக்கா!
நாங்கள் வாழும் நரகம் வெறுத்து
நண்ணினை சொர்க்கம்
''என்னை மறக்க இயலுமா நும்மால்''
என்று நீ விடுக்கும் சவாலை
ஏற்றிட என்றும் எமக்கில்லை வன்மை.

குடும்பத்தினர்.

18, பள்ளி வீதி
அரியாலை.

(14463)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 25. 07. 1970

உதிர்வு: 16: 09. 1990



### ● செல்வி பவானி சண்முகம் ●

(ஆசிரியை யா/ சுருவில் றோ. க. பாடசாலை)

வகுப்பறையின் நாற்காலி
எதிர்பார்த்திருக்க
மூலை மாணவர்கள்
உன் வரவை நோக்க...
உன் கால்கள் ஏன் திசைமாறிப் போயின
பார் புகழ வானுயர்ந்த பவானி
வசந்தத்தில் உனை வைத்து
வாழ்த்துப்பா பாடாமல்
நிழற்படம் வைத்தோ
நினைவுப்பா பாடவைத்தாய்
ஆறாய் ஓடும் கண்ணீர்த் துளிகள்
ஆண்டவன் பாதத்தில் உன்
ஆத்மா சாந்தி பெற

உமது பிரிவால் வாடும்;
அம்மா, அப்பா, அண்ணாமார்,
அக்காமார், அத்தான்மார்,
அண்ணிமார், நண்பர்கள்.

''பவானி பவனம்''
வேலணை மேற்கு,
வேலணை.

(14448)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

''சீரெல்லாம் பெற்றுச் சிறப்புற மகிழ்ந்து
ஊரெல்லாம் போற்ற உவப்புடன் வாழ்ந்து
சிவன்றன் திருத்தாள் சென்றனர் இனிதே''



### திருமதி கமலாதேவி ஆனந்தராஜா

ஆண்டவன் அன்பளிப்பு: 02 - 06 - 1946

அந்நியன் அழிப்பு: 15 - 10 - 1987



### செல்வி அனுஷியா ஆனந்தராஜா

ஆண்டவன் அன்பளிப்பு: 14 - 10 - 1973

அந்நியன் அழிப்பு: 15 - 10 - 1987

திதி: 11 — 10 — 1990

கட்கினியாள் காதலன்
காதல் வகைபுனைவா
ளுட்குடையாளர்
நாணியலபினா - ளுட்கி
யிடனறிந் தாடி யினிது ணுணரு
மடமொழி மாதராள் பெண்

கடமா தொலைச்சிய
கானுறை வேங்கை
யிடம் வீழ்ந்த துண்ணா
திறக்கும் - இடமுடைய
வானகங் கையுறினும்
வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின்.

'' இராஜ வாசா ''
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

கணவன், தகப்பன்: திரு. அ. ஆனந்தராஜா,
மகள்மார், சகோதரிகள்: ஆ. சாருலதா,
ஆ. நிரோஷிக்கா,
தாய், பேத்தி: திருமதி பா. தங்கமுத்து,

[14465]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 13 - 02 - 1919

மறைவு: 16 - 09 - 1990

அமரர்

### இலட்சுமிப்பிள்ளை தம்பிமுத்து

எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவே!

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை எல்லாம் நல்வழி காட்டிய தெய்வமே; இன்று உங்களைப் பிரிந்து 31 நாள் ஆகியும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலவில்லையே அம்மா!

அன்பு மனைவியாக, அருமைத் தாயாக வாழ்ந்து இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய வண்ணை காமாட்சி அம்மன் துணையுடன் எங்கள் எல்லோருடைய கண்ணீர் புஷ்பங்களை உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றோம்.

எமது துக்கத்தில் பங்கு கொண்ட சுற்றத்தார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக் கிரியைகளும், மதிய போசனமும் அவரது இல்லத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (16 - 10 - 90) நடைபெறும், உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். பீட்டன்.

626/8, கே. கே. எஸ் றோட்,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்,

[14460]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அங்கீகாரம் தேடுவதில்...

வடக்கு-கிழக்கில் கடந்த நான்கு மாதங்களில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள், அரசாங்கத்தினால் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற கொடுமை இப்போது மெது மெதுவாக உலகத்துக்குத் தெரியத் தொடங்கி உள்ளது. தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்குப் பதிலாக, அரசாங்கம் தமிழின அழிப்பில் ஈடுபட்டிருக்கிறது என்ற உண்மை உலக நாடுகளுக்குப் புரியத் தொடங்குகிறது என எதிர்பார்க்கலாம்.

உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்காக, தமிழ்ப் பொதுமக்கள் கொன்று ஒழிக்கப்படுகிறார்கள் என்ற விவரத்தை, உலகத் திருச்சபை ஜெனிவாவில் வைத்து வெளியிட்ட அறிக்கையில் துலாம்பரமாக எடுத்துக் கூறியுள்ளது. அந்த அறிக்கைக்கு வெளிநாட்டுச் செய்தி ஏஜன்சிகள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

இலங்கையில் நடக்கும் இன அழிப்பைச் சர்வதேச சமூகம் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. யுத்தத்தை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும். பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்கி சமாதான முறையில் தமிழர் பிரச்னையைத் தீர்த்து வைக்குமாறு நிர்ப்பந்திக்க வேண்டும்— என்று உலகத் திருச்சபை தனது அறிக்கையில் வலியுறுத்தி உள்ளது.

உலகத் திருச்சபை போன்று, ஏனைய சமூக, மத, மனிதாபிமான, அரசியல் நிறுவனங்களும் இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை சர்வதேச மட்டத்தில் உலகத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும். அதன் மூலம் தான், தமிழர்களின் உரிமைப் போராட்டம் நியாயமானது என்ற நிலைப்பாட்டை உலகளாவிய மட்டத்தில் தோற்றுவிக்க முடியும்.

உலகத்தின் கருத்து தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தின் பக்கம் திருப்பப்பட்டால், அதுவே போராட்டத்திற்குக் கிடைத்த முதல் வெற்றியாகும். தமிழர்களின் போராட்டம் பயங்கரவாதம் என்று இலங்கை அரசு சொல்வதை உலகம் நம்பாமல் இருக்கச் செய்தால் தான், போராட்டத்திற்கு உலக அங்கீகாரத்தைப் பெறமுடியும். அப்போது இலங்கை அரசு சர்வதேச சமூகத்தின் நெருக்குதலுக்கு உள்ளாகும். அந்த நெருக்குதலுக்குத் தப்பமுடியாமல் இலங்கை அரசு தமிழர்களின் உரிமைகளை வழங்க வேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாகலாம்.

எனவே தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை உலக சமூகம் அங்கீகரிப்பதற்கான முயற்சிகள் முனைப்புடன் தொடங்கப்பட வேண்டும். தமிழரின் உண்மை நிலையை உலக சமூகத்திற்கு சரியான முறையில் எடுத்துச் சொல்வது முக்கிய பணியாக அமைய வேண்டும்.

இஸ்ரவேலின், அதற்கு ஆதரவான ஏகாதிபத்திய நாடுகளின், பொய்ப் பிரசாரத்தை நம்பி, ஒரு காலத்தில் உலக மக்கள், பலஸ்தீன இயக்கத்தினரையும் பயங்கர வாதிகள் என்றுதான் நினைத்தார்கள். ஏன், தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸின் போராட்டத்தையும் பயங்கர வாதம் என்றே உலக மக்கள் நம்பினார்கள்; நம்ப வைக்கப் பட்டார்கள்;

இப்போது அவை உலக நாடுகளில் பெற்றுள்ள அந்தஸ்தும், அங்கீகாரமும் எத்தகையது என்பதை விவரிக்க வேண்டியதில்லை. தனியான சுதந்திர நாடு ஒன்றுக்குரிய அந்தஸ்தில் வைத்துக் கணிக்கப்பட்டு அவற்றுடன் ராஜீக உறவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன!

இதே நிலைமை தமிழர் உரிமை போராட்டத்துக்கும் கிடைக்க வேண்டும். அதற்கான பாதையில் கால் பதிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

# பல யுத்த தளபாடங்களை இழந்து திண்டாடும் நிலையில் ஸ்ரீலங்கா!

யாழ்ப்பாணம், அக். 16

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஸ்ரீலங்கா அரசு பல யுத்த தளபாடங்களை இழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''விடுதலைப் புலிகள்'' பத்திரிகை வெளியிட்ட தகவல்களின்படி-

★ ஒரு யுத்த விமானம்.

★ ஆறு ''பவள்'' கவச வாகனங்கள்

★ சுமார் 30 இராணுவ வண்டிகள்.

★ பத்துக்கும் அதிகமான கடற்படை விசைப்படகுகள்.

★ ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுதங்கள்.

★ இலட்சக் கணக்கான ரூபாய் பெறுமான முன்னெடி மருந்துகள்.

-ஆகியவற்றை ஸ்ரீலங்கா அரசு கடந்த நான்கு மாத யுத்தத்தில் இழந்திருக்கிறது.

மேலும் இரண்டு கடற்படைக் கப்பல்கள், மூன்று ஹெலிக்கொப்டர்கள் ஆகியவையும் பாரிய சேதமடைந்துள்ளன

இது தவிர தினசரி யுத்தத்திற்கென ஐந்து கோடி ரூபாவை ஸ்ரீலங்கா அரசு செலவிட்டு வருகிறது.

இந்தச் செலவினங்கள், யுத்த தளபாட இழப்புகள், வளைகுடா நெருக்கடியால் தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்ட பாதிப்பு, எண்ணெய் விலை அதிகரிப்பு ஆகியவற்றினாலும்-

ஈராக், குவைத் ஆகிய நாடுகளில் தொழில் புரிந்த இலங்கையர் வேலை இழந்ததனாலும், வெளிநாடுகளில் பணிபுரியும் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு ஊடாக இங்குள்ளோருக்கு பணம் அனுப்ப விரும்பாததாலும் ஏற்பட்ட அந்நிய செலவாணி இழப்பு ஆகியவற்றினாலும் ஸ்ரீலங்கா அரசு அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்று தெரியாமல் திண்டாடுவதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## இரத்தம் பற்றாக்குறை; ஆஸ்பத்திரியில் அவச் சாவுகள்

யாழ்ப்பாணம், அக் 16

மானிப்பாயிலுள்ள யாழ் போதனா வைத்தியசாலையில் போதியளவு இரத்தம் இல்லை. அதனால் அவச் சாவுகள் இடம்பெறுகின்றன. சிகிச்சை அளித்து தடுக்கக் கூடிய பல மரணங்கள் இரத்தம் இல்லாததால் அநியாயச் சாவுகளாக மாறுகின்றன

உதாரணமாக ஹெலித் தாக்குதலுக்கு உள்ளான ஒருவர் வெள்ளியன்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு பெருமளவில் இரத்தப்பெருக்கு ஏற்பட்டிருந்தது.

அதனை ஈடுசெய்யும்விதத்தில் இரத்தம்ஏற்றிச் சிகிச்சை செய்ய ஆஸ்பத்திரியில் போதிய இரத்தம் இருக்கவில்லை. அவர் மரணமானார்

இரத்தம் வங்கியில் இருந்திருப்பின் சம்பந்தப்பட்ட நோயாளியின் மரணத்தைத் தடுத்திருக்கக்கூடும் என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல பலாலி ஷெல் வீச்சுக்கு இலக்காகி கை துண்டிக்கப்பட்ட ந. உதயகுமாரும் இரத்தப் பற்றாக்குறையால் உயிரிழக்க நேர்ந்தது.

மக்கள் இராணுவத் தாக்குதல்களால் அடிக்கடி காயமுறும் இந்தக் காலகட்டத்தில் ஆஸ்பத்திரியில் போதியளவு இரத்தம் கையிருப்பில் இருக்க வேண்டும். அதற்கு வசதியுள்ள பொதுமக்கள் இரத்த தானம் செய்யத் தாராளமாக முன்வர வேண்டும்— என்று யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-15)

## மருந்தகம் மூடப்பட்ட நிலையில்

முழங்காவில், அக். 16

முழங்காவில் மத்திய மருந்தகம் மூடப்பட்டிருப்பதால் அந்தப் பகுதி மக்கள் அடிப்படை சுகாதார வசதிகள் இன்றி கஷ்டம் அடைகின்றனர்

முழங்காவில், நாச்சிக்குடா பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்த வைத்தியசாலையையே நம்பி இருக்கின்றனர்.

இங்கு பாம்புக்கடி அடிக்கடி இடம் பெறுகிறது. ஆனால் உடனடியாக சிகிச்சைஅளிக்க முடிவதில்லை என்று அங்குசென்றுதிரும்பிய தொண்டர் ஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-5-6)

## ஹெலி தாக்கு

காங்கேசன்துறை, அக். 16

ஞாயிறுமாலை 5.30 மணியளவில் கட்டுவன், வயாவிளான் பகுதிகளில் ஹெலி தாக்குதல்களை மேற்கொண்டது.

காலையிலும் மயிலிட்டி, மாவிட்டபுரம், காங்கேசன்துறைப் பகுதிகளில் ஹெலி தாக்குதல்களை மேற்கொண்டது. இதனால் அப்பகுதியில் உள்ள பல வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன.

கடற்பகுதியில் இருந்தும் பலாலி, காங்கேசன்துறை முகாம்களில் இருந்தும் இடையிடையே ஷெல் வீச்சும் இடம் பெற்றன (ஒ-68)

## கடும் பாதிப்பு நிவாரணம் கோரும் 6 ஆயிரம் விண்ணப்பங்கள் செயலகத்தில் தேக்கம்!

1987 ஆம் ஆண்டு முதல் இடம் பெற்ற வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணம் கோரும் ஆறாயிரம் விண்ணப்பங்கள் செயலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

கடும்பாதிப்புக்குள்ளானோருக்கான நிவாரணத் திட்டத்தின் கீழ் கடந்த காலத்தில் இறந்தவர்களது குடும்பத்தினர் மற்றும் காயமடைந்தவர்கள் நிவாரணம் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்திருந்தனர்.

கொழும்பில் இருந்து நிதி கிடைக்காத காரணத்தினாலேயே இந்த 6 ஆயிரம் விண்ணப்பங்களும் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஆயிரத்து 800 பேருக்கு மட்டுமே இதுகால வரை நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# புதுவைக் கடற்பகுதியில் உயிரிழந்த 67 பேரில் 53பேர் அனலைதீவினர்

அனலைதீவு, அக் 16

கடந்த ஆறாம் திகதி அனலைதீவில் இருந்து படகு கவிழ்ந்ததில் 67 பேர் உயிழந்தனர் அல்லவா? அவர்களில் 53 பேர் அனலைதீவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

78 பேர் இந்தப்படகில் தமிழக நோக்கிப் புறப்பட்டனர். அவர்களில் 36 பேர் ஆண்கள் 42 பேர் பெண்கள். எஞ்சியோர் குழந்தைகள்.

இந்தப்படகு புதுவைக் கடற்பகுதியில் மூழ்கியதில், அனலைதீவுப் பகுதியைச் சேர்ந்த க. கோபாலஐயர், இ. கண்ணன்ஐயர், வே. கனகசபை, வே. குகதாசன், செல்லத்துரைநாதன், மேசன் தொழில் பார்க்கும் தில்லையம்பலத்தின் மகன் ஆகிய ஆறு பேரும் நீந்திக்கரை சேர்ந்தனர் எஞ்சியோர் உயிரிழந்ததாக நம்பப்படுகிறது.

இந்தப் படகில் சென்ற— பிற இடங்களைச் சேர்ந்த— 19 பேர் பற்றி எந்தத் தகவலும் இல்லை அவர்களும் உயிரிழந்திருக்கக் கூடும் எனச் சந்தேகிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களில் அனலைதீவுப் பகுதியைச் சேர்ந்தவர்களான கோபால ஐயர் குடும்பத்தில் ஐவர். கண்ணன் ஐயர் குடும்பத்தில் ஐவர், வே. கனகசபையின் மனைவி. வே. குகதாசன் குடும்பத்தில் ஆறு பேர் தில்லையம்பலம் உட்பட அவரது மகன் குடும்பத்தில் 10 பேர், ஆக மொத்தம் 28 பேரின் விவரங்கள் கிடைத்துள்ளன.

இதே சமயம்—

இந்த சம்பவத்தில் இறந்தவர்கள் எனச் சந்தேகப்படும் எட்டுப் பேரின் சடலங்கள் முத்துப் பேட்டை கடற்பகுதியிலும், தமிழகத்தின் மற்றைய கரைகளில் 23 சடலங்களும் கரை ஒதுங்கியதாக தமிழச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-18)

### வீரமரணம்

கடந்த வியாழனன்று மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுக்கு இலக்காகி சுதாகர் கெஞ்சன் ஆகிய இரண்டு விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் வீரமரணமடைந்தார்கள். (உ)

## ஸ்ரீலங்கா கடற்படையினரால் பெற்றோல் குண்டு வீச்சு!

சென்னை, அக். 15

பாக்கு நீரிணையில் சென்று கொண்டிருந்த படகு ஒன்றின் மீது இலங்கைக் கடற்படையினர் பெற்றோல் பல்புகளை எறிந்தனர் என்றும்— அதனால் படகு தீப்பற்றி எரியத் தொடங்கியது என்றும்— படகில் இருந்த நான்கு பேரை இந்திய மீனவர்கள் காப்பாற்றினர் என்றும் சென்னைக்குக் கிடைத்த தகவல் ஒன்று கூறியதாக இந்திய வானொலி அறிவித்தது.

படகோட்டிக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்றும் அச்செய்தியில் கூறப்பட்டது.

காப்பாற்றப்பட்டவர்கள் யார், எந்த நாட்டவர்கள் என்பவை குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை.

## வவுனியா விவசாயக்கல்லூரி

யாழ்ப்பாணம், அக். 16

வவுனியா விவசாயக் கல்லூரி விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவ-மாணவிகள், விவசாய விரிவாக்கச் சேவை ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று இன்று செவ்வாய் காலை 10 மணிக்கு திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் நடைபெறும். (இ)

## முதலாம் தர அதிபர்கள்

சாவகச்சேரி உதவிக் கல்விக் கோட்டத்தில் ஆறு பேர் முதலாம் தர அதிபர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-117)

# கோட்டை தேவாலயத்தின் நடுவே உருவெடுத்துள்ள சவச்சாலை!

(I)

தேவாலயம் சவச்சாலையான காட்சி......

தேவாலயத்துக்கு மத்தியில் விசுவாசிகள் கூடியிருந்து செபம் செய்யும் இடத்தில் சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த காட்சி......

இந்த வேறுபட்ட காட்சியைத்தான் முதலில் பார்த்தோம். யாழ். கோட்டைக்குள்!

கோட்டையை முற்றுகையிட்டு வெற்றி கொண்ட பின்னர், அதனைச் சுற்றிப் பார்க்க விடுதலைப்புலிகள் அழைத்துச்சென்ற பத்திரிகையாளர் குழுவில் நாங்களும் இருந்தோம்.

சுற்றிப் பார்க்கும் படலம் யாழ் மணிக்கூட்டுக்கோபுரத்திலிருந்து ஆரம்பமானது.

'தம்பி! ஹெலி வந்து கோட்டைக்குள் கிரனேட் வீசிச்சுது ..... யாருக்கும் சேதமே......?' — என்னுடன் வந்த பத்திரிகையாளர் ஒருவர் அங்கிருந்த போராளியிடம் கேட்டார். அவர் முகத்தில் கவலையின் அறிகுறி கோட்டைக்குள் போய் வருவதற்குள் பொம்மரோ, ஹெலியோ, சகடையோ வந்து அனர்த்தம் புரிந்துவிட்டால்......அவர் முகம் அவரது எண்ணத்தைப்பிரதிபலித்தது

'அண்ணே...... பயப்பிடாமல் போங்கோ......நடுறோட்டாலை நடவுங்கோ... கரைக்குப் போனீங்கள் எண்டால் கால் இல்லாமத்தான் வருவியள்...' என்று எங்களுக்குத் தைரியம் சொல்லும் பாணியில் பீதியைக் கொடுத்தார் அந்த இளம் போராளி.

மணிக்கூட்டுக்கோபுரத்துக்கு அருகே வீதிகளில் இருமருங்கிலும் 'மிதிவெடிகள் கவனம்' என்ற வாசகத்துடன் நடப்பட்டிருந்த பலகைக் குறிப்புகளைக் கண்ட மூத்த செய்தியாளர் முழித்தார்.

'அண்ணே...... யோசியாதையுங்கோ; அப்படி ஏதும் நடந்தால் 'செய்தியாளர் செய்தியானார்' என்று தலைப்புப் போட்டு முன்பக்கத்திலை முழுச்செய்தி எழுதலாம்' — என்று 'ஜோக்' அடித்து சூழ்நிலையை சுவாரஸியமாக்கினேன் நான்;

மத்தியகல்லூரி மைதானம், திறந்தவெளி அரங்கு ஆகியவற்றுக்கு இடையேயான வீதி வழியாகக் கோட்டையை நோக்கி நடைபவனியில் எங்கள் பயணம் ஆரம்பமாயிற்று

### தலையிழந்த மத்திய கல்லூரி

அங்கிருந்து பார்த்தபோது மத்திய கல்லூரி தலையிழந்து கிடந்தது. கூரைகள் தரைகளைத்தொட, கட்டடங்கள் அலங்கோலமாக உடைந்து. சிதைந்து கிடக்கும் தோற்றம் மனதை நெருடியது. யாழ்ப்பாணத்தின் புகழ் பூத்த கல்லூரி ஒன்றுக்கு இப்படி ஓர் அவலமா?

அருகில் சாதனைகள் பல புரிவதற்கு களமாய் அமைந்த மத்திய கல்லூரி மைதானம் புல் பூண்டு முளைத்து வெறும் திடலாய்க் காட்சியளிக்கின்றது. மதிற் சுவர்கள் ஆங்காங்கே உடைந்து சரிந்து கிடந்தன.

அருகே......

ஆசியாவின் தலைசிறந்த நூலகங்களுள் ஒன்று எனப் போற்றப்பட்ட யாழ். நூலகம் வெறும் எலும்புக்கூடாய், எரிந்து, கருகி, கரியாய் சேதமுற்று [illegible]

பொது நூலகத்தைக் [illegible] றுத்துச் செல்லும் விடுதலைப் புலிகளின் எலிவளை போன்ற தொடர் 'பங்கர்' — கோட்டையை முற்றுகையிட அவர்கள் பட்ட கஷ்டங்களை நினைவூட்டும் விதத்தில் — நீண்டு, வளைந்து, ஆழமாகச் சென்றது.

நூலக வாசலில் முன்னர் கம்பீரமாகக் காட்சி தந்த வண. பிதா லோங் அடிகளாரின் நெடிதுயர்ந்த சிலை இன்று தலையிழந்து, களையிழந்து, கலைந்து சேதமுற்றுக் கிடந்தது.

முன்னர் சுப்பிரமணியம் பூங்கா இருந்த இடத்தில் இன்று இரண்டொரு [illegible] மரங்களைத் தவிர, மிகுதி எல்லாம் — [illegible] துக்குப் பதிலாக — புல், பூண்டுகள்தான்.

நிற்கும் மரங்களும் ஷெல் மற்றும் விமானக் குண்டுத் தாக்குதல்களினால் கிளைகள் முறிந்து, கொப்புகள் சரிந்து, அரைவாசி கருகி, விறகாகித் தோற்றமளிக்கின்றன.

### மாநகரசபைப் பகுதியில்

அதையும் தாண்டி முன்னேறினோம்;

முன்னர் யாழ். மாநகர சபைக் கட்டடம் அமைந்த இடத்தை நினைப்பூட்ட இன்று அங்கு ஒன்றுமே இல்லை — உடைந்து தொங்கிய சில இரும்புப் பாளங்களையும் சில குட்டிச் சுவர்களையும் தவிர.

## கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

பக்கத்தில் தந்தை செல்வா நினைவுத்தூபி மட்டும் தனித்துவமாக உயர்ந்து கம்பீரமாக நிற்கிறது— இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தூபியில் சிறு சிறு சிராய்ப்புகள்.

அருகில் துரையப்பா விளையாட்டரங்கின் பார்வையாளர் கூடம் — மூன்று மாத விமானத்தாக்குதல்களின் கோரம் அதன் ஒவ்வொரு அங்குலச் சுவரிலும் தெரிந்தது.

அரங்கம் முழுவதும் விமானக்குண்டு சிதறல்கள் போட்ட கோலங்கள்.

அரங்கின்மேல் கூரை இருந்ததிற்கு அடையாளம் ஏதுமில்லை

ஆனால் பார்வையாளர்கள் அமரும் படிக்கட்டுகளுக்கு கீழே, இருந்த விளையாட்டு வீரர்களின் உடைமாற்றும் அறைகள் மட்டும் — இன்னமும் இத்தனை விமானக் [illegible] களுக்கு மத்தியிலும் [illegible] பிக்கும் வகையில் சேதம் எதுவுமின்றி மிச்சமாகக் கிடக்கின்றன.

அரங்கிற்கு முன்னே துரையப்பா நினைவுக்கல் கேட்பாரற்றுக் கிடந்தாலும் சேதமின்றி மிஞ்சி நிற்கிறது.

அரங்கிற்கு முன்னே பொலீஸ் நிலையக் கட்டடம்...... அது சின்னாபின்னமாகி...... அங்கு அமைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் சென்றிகள், பதுங்குகுழிகள் எல்லாம் சேதமுற்ற நிலையில் கண்டோம்......

விமானக்குண்டுகளினால் சின்னாபின்னமாகிக் கிடக்கும் இந்தக் கட்டடங்களுக்கிடையே அமைக்கப்பட்டிருந்த சென்றிகளுக்குள்தான் தமது உயிரைத் துச்சமென மதித்து எங்கள் தம்பியர் நின்று போராடினார்களா? என்னே துணிச்சல்!

### கூண்டோடு கைலாசம் அனுப்பியவர்கள்

கோட்டைக்குள் இருந்து டிரக்கில் வெளியே வர முயற்சித்த படையினரை இந்த சென்றிக்குள் இருந்த போராளிகள் தான் கூண்டோடு கைலாசம் அனுப்பியவர்கள்.

சேதமுற்றுக் கிடக்கும் அந்தச் சென்றியை - பொலீஸ் நிலையக் கட்டட இடிபாடுகளிடையே சென்று பார்க்க மனம் தூண்டியது;

ஆனால் வீதி ஓரத்தில் நடப்பட்டிருந்த பலகையில் ''மிதிவெடிகள் கவனம்'' என்று எழுதப்பட்டிருந்த வாசகம் என்னை அந்தப் பக்கம் முன்னேற விடாது தடுத்துவிட்டது.

கோட்டையை நோக்கி காலடிகளைத் தொடர்ந்தோம்;

கோட்டை முன்வாசலுக்கு முன்பாக......

வலதுபுற வெளியில் அமைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை தலையிழந்து துண்டாகி......

### பறக்குது புலிக்கொடி

இடதுபுறத்தில் சேதம் அதிகமின்றி......

கோட்டை வாயிலிலே புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தது.

முன்வாசலைத் தாண்டியதும் இடது பக்கம் திரும்பினேன். பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகம் இருந்த பக்கம் பார்த்தேன். அலுவலகத்தைக் காணவில்லை. கட்டடம் இருந்ததற்கு அடையாளமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக சில இடிபாடுகளின் சொச்சங்கள்...!

அகழிக்கு நடுவே உள்வாசல் வரை இருந்த பாதை வழியாக கோட்டை முகப்பு நோக்கி நடந்தோம்

கோட்டை வெளிச் சுவர்களில் புலிகளின் ஆர். பி. ஜி குண்டுகள் தடம் பதித்த காயங்கள் பல இடங்களில் தெரிந்தன

முகப்பு வாசலில் பெயர் விவரங்களைப் பதிந்து கொண்டு நீண்ட முகப்பைத் தாண்டினோம்.

சுமார் 40 யார் நீளமான-குகை போன்ற அமைப்பை உடைய அந்த நீண்ட வாயிலிலே போர்த் தடங்கள் ஏதுமில்லை.

அதனைத் தாண்டி கோட்டைக்குள் சென்றதும்.

### ஹிரோஷிமா போல

இது என்ன? [illegible] டால் அழிந்துபோன ஹிரோஷிமாவின் மிச்சமா......?

அப்படித்தான் அந்தக் காட்சி.

எங்கு திரும்பினாலும் கட்டடங்களின் அழிவுகள், சிதைவுகள், சேதங்கள்......

நடுமைதானத்தில் எரிந்து காட்சியளிக்கும் வாகனங்கள்......

கோட்டைக்குள் எமது முதற்பார்வை தேவாலயப் பக்கம் சென்றது. சுமார் முன்னூறு வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட நெடிதுயர்ந்து நீண்டு, நின்ற ஒல்லாந்தர்பாணித் தேவாலயம்.

அதில் [illegible]ன்று மிஞ்சிக்கிடப்பது சுவர்கள்தான். கூரைகள், ஓடுகள், சின்னாபின்னமாக சுவர்கள் காறையிழந்து' தேவாலய மேடை சிதைவுற்றுத் தேய்ந்துபோய்க் கிடக்கிறது. தளபாடங்கள் சேதமுற்றுக் கிடந்தன.

தேவாலயத்தின் நிலத்தில் பதிக்கப்பட்டிருந்த கருங்கற்கள் அகற்றப்பட்டு தேவாலயத்துக்கு வெளியில் அடுக்கப்பட்டிருந்தன.

இந்தக் கற்கள் அந்நியரால் முன்னர் யாழ்ப்பாணத்தில் அழிக்கப்பட்ட இந்துக் கோயில்களில் இருந்து புரட்டி எடுத்துக்கொண்டு வரப்பட்டு தேவாலயத்தின் உள்ளே நிலத்தில் பதிக்கப்பட்டவை என்று அறியவந்தது.

தேவாலயத்தின் மத்தியில் சில குழிகள்...... முன்னர் கழிவு நீர் செல்லும் வாய்க்கால்களாகவோ சிறிய நிலவறைகளாகவோ இருந்திருக்க வேண்டும்.

ஒரு போராளி சுட்டிக்காட்டினார்.

''அண்ணே! இங்குதான்- இந்தக் குழிக்குள்தான் - உயிரிழந்த இருபடையினரின் சடலங்கள் வெறுமனே வீசப்பட்டுக் கிடந்தன'' என்றார்.

குழிகளை எட்டிப்பார்த்தேன் சகிக்கமுடியாத நெடி வந்துகொண்டிருந்தது.

உள்ளே......

ஒரு சிப்பாயின் தலைக் கவசம், சில எலும்புத்துண்டுகள்.

உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்களை வெட்டிப் புதைக்கக்கூட வாய்ப்பிருக்கவில்லைப்போலும். பதுங்கு குழிகள், சென்றிகளைவிட்டு வெளியே வந்தால் புலிகளின் ஷெல் குண்டுகளின் துண்டுகளுக்கு இரையாகிவிடுவோமோ என்ற அச்சம் சிப்பாய்களைப் பிடித்திருக்கும் தானே...!

[illegible] உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்களை தங்களுக்கு மனம் எட்டாத இடத்தில், தூரத்தில் கிடக்கும் தேவாலயக் குழிக்குள் ஓடிச்சென்று அவசரமாகப் போட்டு மூடிவிடும் முயற்சி நடந்திருக்கிறது.

இதுதான் தேவாலயம் சவக்காலையான கதையின் தகவல்.

தேவாலய வாசலிலும் சில குழிகள். அங்கிருந்தும் சடலங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இந்தச் சடலங்கள் இன்று அவர்கள் பிறந்த பூமிக்கே- செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாக - கப்பலில் அனுப்பப்பட்ட தகவல் வாசகர்களுக்குத் தெரியும்.

(வளரும்)

- கூர்விழியான் -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

செவ்வாய்க்கிழமை 16-10-1990


ஜூன் மாதம் கொழும்பில்

## கைதான 175 தமிழர்கள் தொடர்ந்து மஹர சிறையில்

யாழ்ப்பாணம், அக். 16

கடந்த ஜூன் மாதம் கொழும்பில் கைதாகிய தமிழ் இளைஞர்களில் 175 பேர் இன்னும் மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள்-ஸ்ரீலங்கா படைகள் மோதல்கள் ஆரம்பமானதை அடுத்து கொழும்பில் கைதானவர்களே இவர்கள்.

இவர்களுடன் கைதான இளைஞர்களில் ஒரு பகுதியினர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டு விட்டனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 175 இளைஞர்களில் சிலருக்கு எதிரான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

எஞ்சியோர் சம்பந்தமான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்தத் தகவலை மஹர சிறையிலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்டு தற்போது யாழ்ப்பாணம் வந்திருக்கும் சரவணையைச் சேர்ந்தவரான தே. ஆர். விநாயகன் என்ற இளைஞர் தெரிவித்தார்.

விபத்து ஒன்றில் இடது கையை இழந்த இவருக்கு செயற்கைக் கை பொருத்தப்பட்டுள்ளது.

கை இழந்திருப்பதனால் இவர் குண்டு வெடிப்புடன் சம்பந்தப்பட்டிருந்தார் என்று காரணம் காட்டி இவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாம். (உ - 3)

## சொற்ப நகைகளே இருந்தன!

யாழ்ப்பாணம், அக். 16

யாழ் கோட்டையிலிருந்து படையினரால் எடுத்துச் செல்லப்பட்ட நகைகள் இறுதியாகக் கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட சொற்ப நகைகள் மட்டுமே என்று மக்கள்வங்கி அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

ஒவ்வொரு கிளையிலும் மீளளிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்த 5 முதல் 10 நகைகள் மட்டுமே கோட்டையில் வைக்கப்பட்டிருந்தன. மொத்தம் 15 கிளைகளில் மீளளிக்கப்படாமல் இருந்த நகைகள் அங்கு இருந்தன.

பணம் செலுத்தாதவர்களின் நகைகள் கொழும்பிலேயே பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரி சொன்னார். (ஒ-3)

## மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு இன்றுமுதல்மின்விநியோகம்

யாழ்ப்பாணம், அக் 16

மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்திய சாலைக்கு இன்று முதல் நீர் மின் விநியோகம் கிடைக்க இருக்கிறது.

கிளிநொச்சியில் இருந்து 33 கே. வி. இணைப்பூடாக பெறப்படும் மின்சாரம் சுன்னாகம் மின் நிலையத்துக்கு கடந்த வாரம் கிடைத்திருந்தது.

சுன்னாகத்தில் இருந்து மானிப்பாய்க்குச் செல்லும் மின் இணைப்புக்கள் திருத்தப்பட்டதை அடுத்து இன்று முதல் ஆஸ்பத்திரிக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட இருப்பதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உப மின் நிலையங்களில் உள்ள டிரான்ஸ்போமர்களுக்கு தேவையான ஓயில் கிடைக்கும் பட்சத்தில்- யாழ் நகரப்பகுதிக்கும் மின் விநியோகம் வழங்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஒ-3)

## குண்டுவீச்சு வேளையில் பதுங்குகுழிக்குள் பிரசவம்!

வேலணை, அக். 16

நேற்று வேலணையில் விமானக் குண்டு வீச்சு நடந்த போது, அருகில் இருந்த வேலணை அரசினர் வைத்திய சாலை பதுங்கு குழிக்குள் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது!

மண்டைதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி யோ சந்திரசீலி என்பவரே குண்டு வீச்சு நடந்தவேளை பதுங்கு குழிக்குள் ஆண் குழந்தையைப் பிரசவித்தார். இது அவருக்கு முதற்பிரசவம்.

குண்டு வீச்சு நடந்தவேளை பிரசவ வேதனை கண்ட அந்தத் தாயை உடனடியாக டாக்டர் ஆ திருநாவுக்கரசு பதுங்கு குழிக்குள் கூட்டிச் சென்று சிகிச்சை அளித்தார். குழந்தை சுகப்பிரசவமாகும். (ஒ-167)

## நெல்சன் மண்டேலாவுக்கு புதுடில்லியில் வரவேற்பு!

புதுடில்லி, அக். 16

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா நேற்று புதுடில்லிக்கு விஜயம் செய்தபோது அவருக்கு ஒரு நாட்டின் தலைவருக்குரிய வரவேற்பை இந்திய அரசு அளித்தது.

ஜனாதிபதி மாளிகையை வந்தடைந்த டாக்டர் நெல்சன் மண்டேலா 21 மரியாதைக் குண்டுகள் முழங்க ஜனாதிபதி வெங்கடராமனால் வரவேற்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியில் பிரதமர் வி. பி. சிங், உப ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் அதி உயர்ந்த 'பாரத ரத்னா' விருது மண்டேலாவுக்கு இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படவிருக்கிறது.

ஜனாதிபதி வெங்கடராமன் இவ்விருதை, ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள வைபவம் ஒன்றில் வைத்து வழங்குவார். (அ-எ)

## 19 பயணிகள் பலி

பீகிங், அக் 16

சீனாவில் இடம்பெற்ற ரயில்-பஸ் விபத்து ஒன்றில் 19 பஸ் பயணிகள் உயிரிழந்தனர். (ஓ-எ)

## ஆஸ்பத்திரிக்குள் நாய்கள் உலா!

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குள் இரவு வேளைகளில் நாய்கள் உலா வருகின்றன.

மின்சார வசதியின்றி இருளில் மூழ்கியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை அந்த நாய்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

நோயாளிகளின் உணவுப் பொருள்கள் போன்றவற்றை நாய்கள் பயமின்றி இழுத்து எடுத்துச் செல்கின்றன. (ஒ-15)

## மின்சார விபத்து

மின்சார விநியோகம் கிடைத்த அன்றே மின்சாரத்தினால் குடும்பப்பெண் ஒருவர் தாக்குண்டார். தெய்வாதீனமாக அவருக்கு விபரீதம் எதுவும் நிகழவில்லை.

இச்சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி கைலாயபிள்ளை வீதியில் இடம்பெற்றது. (ஒ-117)

## பாடசாலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதேசமயம் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் பாடசாலைகள் தொடர்பாக நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில்—

உயிரினும் மேலான உரிமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுக்க கல்வியும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. பாதுகாப்பு இல்லை என்று சொல்லிக்கொண்டு இருக்காமல் பாதுகாப்பினை ஏற்படுத்தி இழந்த கல்வியினை சகல வகுப்பு மாணவர்களுக்கும் விரைவாகக் கிடைக்கச் செய்வோம் — என்று தெரிவித்துள்ளார்.

தனியார் கல்வி நிறுவனங்களும் இலாப நோக்கை மட்டும் கருத்திற் கொள்ளாமல் மாணவர்களின் தேவைகளை உணர்ந்து செயற்பட முன்வர வேண்டும் என்றும் —

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கும், வன்செயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து இலவசக் கல்வியை வழங்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். [உ]

## வங்கிகள்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டன. அத்துடன் அந்த வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களின் காசோலைகளை வைப்பிடவும், வழி செய்யப்பட்டிருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட அளவு கொடுக்கல் வாங்கலும் மேற்கொள்ளப்பட்டன.

மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் மட்டுப்படுத்தப்பட்ட கொடுக்கல், வாங்கல் இடம்பெற்றது. ப. நோ. கூ. சங்கங்கள் காசோலைகளை வைப்பிட்டன.

நேற்று முதல் தேசிய சேமிப்பு வங்கியும் இயங்க ஆரம்பித்தது. சேமிப்புக்கான வட்டியும், ஓரளவு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டது. புதிய கணக்குகளும் ஆரம்பிக்கப்பட்டன.

வங்கிகள் செயல்பட்ட போதும் போதியளவு பணக் கொடுக்கல் வாங்கலோ, பணப்புழக்கமோ இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பலாலி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் தாக்குதல் ஏதும் நடத்தவில்லை.

பின்னர் பிற்பகல் அளவிலும் ஹெலிக்கொப்டர் இப்பகுதியெங்கும் சுற்றிச் சுற்றி கலிபர் தாக்குதலை மேற்கொண்டது. அத்துடன் ஹெலியிலிருந்து ''கிரனேட்'' டும் வீசப்பட்டது.

பலாலி, காங்கேசன்துறை முகாம்களில் இருந்து இடையிடையே ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. (ஒ 68)

## வேலணையி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதிலும் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்கள்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் வாசலில் நின்ற அல்லைப்பிட்டி கிராம சேவை அலுவலர் திரு.சே. சுந்தரலிங்கம் கால் விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் படுகாயமடைந்தார்.

அடுத்த குண்டு உதவி அரசாங்க அதிபர் பணிமனை [illegible] பனந்தோப்பிற்குள் விழுந்தது இதனால் இரண்டு பனை மரங்கள் முறிந்து வீழ்ந்தன. (ஒ-167)

## உங்கள் வாகன------

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் பல இடங்களிலும் உள்ள ''டிரான்ஸ்போமர்'' களில் இருந்து 'ஓயில்'' திருடப்பட்டுள்ளது. நீங்கள் வாங்கும் டீசலில் அந்த ஓயிலும் கலக்கப்பட்டிருக்கலாம்.

இந்தக் கலப்பு டீசலில் இயங்கும் வாகனங்கள் வீதிகளில் வித்தியாசமான 'ஊளை' ஒலிகளை எழுப்பிச் செல்வதையும் கேட்க முடிகிறது.

இந்தக் கலப்பு டீசல் வாகனங்களின் என்ஜின்களை மிக மோசமாகச் சேதமுறச் செய்வதாக வாகனம் திருத்துவோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

டீசல் 'ஓயில்' கனம் கூடியதென்றும் மிகவும் [illegible] என்ஜின்களைச் சேதப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-5)

## செய்திச் சாரம்

### புல்மோட்டை முகாம் மீது ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 16

கடந்த சனியன்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள புல்மோட்டை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். [உ]

### மண்டைதீவில் ஹெலி தாக்கி இருவர் காயம்

மண்டைதீவுக் கடற்கரையில் ஏற்கனவே கைவிடப்பட்ட வள்ளத்தைப் பார்க்கச் சென்ற இருவர் ஹெலித் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை நடந்த இந்தச் சம்பவத்தில் யாழ். பொம்மை வெளியைச் சேர்ந்த முகம்மது சித்திக் (வயது 37), சாவற்கட்டைச் சேர்ந்த வி சின்னத்தம்பி (வயது 40) ஆகிய இருவருமே காயமடைந்தனர் [ஒ-15]

### பலாலியில் சிறில்!

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு சிறில் ரணத்துங்கா நேற்று பலாலி, வயாவிளான், காரைநகர் முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்டார். [ ]

### டிராக்டர்மீது ஹெலி சுட்டதில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், அக். 16

உழவு யந்திரத்தில் (டிராக்டர்) சென்றவர்களை நோக்கி ஹெலி மேற்கொண்ட தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மயிலிட்டியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இணுவிலைச் சேர்ந்த சங்கரன் யோகராசா (வயது 23), ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சுந்தரம் ரஞ்சன் (வயது 33) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர். (ஒ-15)

### வீமன்காமத்தில் வீடு சேதம்

பலாலியிலிருந்து நேற்றுப் பகல் ஏவப்பட்ட ஷெல்களில் இரண்டு வீமன்காமம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மேல் விழுந்து வெடித்ததில் வீடு பலத்த சேதமடைந்தது.

வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாகத் தப்பிக் கொண்டனர். (ஒ)

### சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மின்சாரம்

சாவகச்சேரி மாவட்ட ஆஸ்பத்திரிக்கு நேற்றுமுதல் மின்சாரம் கிடைத்துள்ளது.

தென்மராட்சிப் பகுதிக்கு மின்சாரம் கிடைத்துள்ள போதிலும், சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள சில மின் மாற்றிகளில் 'ஓயில்' இல்லாததால் அப்பகுதிக்கு மின்சாரம் விநியோகிக்கப்படவில்லை. (ஒ-117)

## பிரெஞ்சு பாஸ்போர்ட்டில் ரோம் சென்றோர் கைது!

பிரெஞ்சுக் குடியுரிமை பெற்ற மூவரின் கடவுச் சீட்டுடன், வேலைவாய்ப்பு ஏஜன்சி ஒன்றினால் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒரு பெண்ணும், மற்றும் இரு இளைஞர்களும் நாடுகடத்தப்பட்டனர்.

அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கியதும் அங்கு வைத்துக் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 13 நாட்களின் பின்னர் அவர்கள் நீர்கொழும்பு நீதவான் திரு. எஸ். மகேந்திரராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்கள் சார்பில் சட்டத்தரணி திரு. எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா ஆஜராகி வாதாடினார்.

அதனைத் தொடர்ந்து அந்த மூவரும் தலா ஐயாயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பிரெஞ்சுக் குடியுரிமை பெற்ற மூன்று இந்தியர்களின் கடவுச் சீட்டில் சம்பந்தப்பட்ட மூவரின் படங்களையும் ஒட்டியே ஏஜன்சி அவர்களை அனுப்பி வைத்தது.

எயர்லங்கா விமானம் மூலம் (பல்கேரியா ஊடாக) ரோம் சென்றடைந்த மூவரும் அங்கு தடுத்து வைக்கப்பட்டு, அங்கிருந்து பல்கேரியாவுக்கு அனுப்பப்பட்டு, பின்னர் அங்கிருந்து ''இண்டர்போலின்'' உதவியுடன் கொழும்புக்கு நாடுகடத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறு நாடு கடத்தப்பட்ட பெண் அச்சுவேலியைச் சேர்ந்தவர். அடுத்த இருவரும், கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். (அ-3)


## தீபாவளி மலிவு விற்பனை

| | | |
|---|---|---|
| காஞ்சிபுரம் (Art Silk) | ... | 450/-, 500/- |
| வருஷம் 16 சேலை | ... | 625/- |
| அம்பர் ரெறின் சேலை | ... | 490/- |
| கொடி பறக்குது சேலை | ... | 250/- |
| செந்தூரப்பூவே சேலை | ... | 325/- |
| கட்டோனிக் சேலை | ... | 490/- |
| கிறிம்பிளின் 60'' 1 மீட்டர் | ... | 35/-, 40/- |
| ரிக்கின் (நனைவு) 1 '' | ... | 35/-, 40/- |
| பிளவுஸ் துணிகள் 1 '' | ... | 40/- |
| சோட்ஸ் (சிறியவர்களுக்கானது) | ... | 40/- |
| பெல்ஸ் | ... | 90/-, 140/- |
| டியுறோ, பிளேன்கலர் 36'' 1 மீட்டர் | ... | 30/- |
| சில்க் பொலிஷ்ரர் 44'' | ... | 40/-, 50/- |

இன்னும் பலவிதமான புடைவை வகைகளையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள.

இன்றே விஜயம் செய்யுங்கள்

த. குமாரசாமி ரெக்ஸ்ரயில்ஸ்

பருத்தித்துறை வீதி.
(பாரதியார் சிலைக்கு அருகாமையில்)

(14461)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு
**சின்னத்துரை சிவசுப்பிரமணியம்**
(இளைப்பாறிய நீர்ப்பாசன அதிபர்)
ஆண்டவன் படைப்பு: 11- 10- 1928

திருமதி
**தவமணி சிவசுப்பிரமணியம்**
(இளைப்பாறிய ஆசிரியை)
ஆண்டவன் படைப்பு: 13- 11- 1929

செல்வன்
**சிவசுப்பிரமணியம் சிவசங்கர்**
[மருத்துவ பீட மாணவர், யாழ். வளாகம்]
ஆண்டவன் படைப்பு: 23- 03- 1967

அந்நியர் அழிப்பு: 16. 10. 1987

அன்பின் திருவுருவாய், எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எங்களை விட்டு நீங்கி மீளாத்துயில் [illegible] அன்புத் [illegible] நினைவுகள் என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

–சகோதர, சகோதரிகள்,
மைத்துன, மைத்துனிகள்,
மருமக்கள், நவி, நதியா.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு.

[14468]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**தாமோதரம்பிள்ளை தனபாலசிங்கம் [தனா]**

(பாதுகாப்பு உத்தியோகத்தர் தேசிய சேமிப்பு வங்கி. யாழ்ப்பாணம். முன்னாள் கடற்படை வீரர்)

தோற்றம்:
05 — 05 — 1947

மறைவு:
16 — 09 — 1990

மன்னவனே நீர் சென்று மாதமொன்று ஆயிற்றா கண்ணீர்தானே எமக்கு நிரந்தரம் ஆயிற்றா
ஆற்றுவார்,
தேற்றுவார்,
அரவணைப்பார்
[illegible] இல்லையெங்களுக்கு
திசையறியா
கப்பல் போல்
தவிக்கிறோம்
அனாதைகளாய்
தெய்வமாய்
துணையிருந்து
வழிகாட்டு
நாம் கரைசேர.

உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கிறோம்.

–குடும்பத்தினர்

இல. 1,
வீடமைப்புத்திட்டம்,
கெற்பலி,
மிருசுவில்.

[14452]

## மரண அறிவித்தல்கள்

### இ. வே. கார்த்திகேசு
[பிரபல வர்த்தகர், பசறை]

காரைநகரைச் சேர்ந்த திரு E. V. கார்த்திகேசு அவர்கள் 13-10-90 சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் திருமதி கா. அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தங்கமுத்து, காலஞ்சென்ற E. V. ஆறுமுகம், திருமதி பார்வதி நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. கா. நாகேந்திரம் [பிரபல வர்த்தகர், பசறை], திருமதி ந. சரஸ்வதி ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி நா. ராசேஸ்வரி, திரு. கு. நமசிவாயம் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [16-10-90] மாலை 2-00 மணிக்கு காரைநகர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தங்கோடை,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்
(14471)

### செல்வி சிவஞானதேவி குமாரசாமி
நெட்டிலைப்பாய், கோண்டாவில்

செல்வி சிவஞானதேவி குமாரசாமி 15-10-90இல் காலமாகி விட்டார். இவர் இ. பொ. குமாரசாமி (இளைப்பாறிய அதிபர், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) - திருமதி கு. சிவஞானம்மா ஆகியோரின் மகளும், கு. ஆனந்தராசா (J B Textile), திருமதி சி. சறோஜினிதேவி, திருமதி து. மகாதேவி, செல்வி கு. பத்மாதேவி (மாக்ஷெப்) ஆகியோரின் சகோதரியும், சட்டத்தரணி சி. சிதம்பரநாதன், அ. துரைராசா (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி ஆ. ஆனந்தலட்சுமி (ஆசிரியை, மல்லாகம் றோ. க. பாடசாலை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 16-10 90 (இன்று) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. பொ. குமாரசாமி

(14470)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 201/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org